விலை ரூபா: 10.00


*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 19 சனிக்கிழமை (02.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 165




## நீண்டகாலமாக விடுதியில் தங்கியிருப்பவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்ப அரசு ஏற்பாடு

### பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்து கொழும்புக்கு வந்து நீண்டகாலமாக தனியார் விடுதிகளில் தங்கியுள்ளவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைப்பதற்கான விசேட நடவடிக்கை ஒன்றை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

எந்தவிதமான குறிக்கோளும் அற்ற நிலையில் அவர்கள் கொழும்பில் தங்கியிருப்பது தேசிய பாதுகாப்பிற்கு குந்தகமாக அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நேற்று கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

நீண்டகாலமாக தங்கியிருப்பவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான (06 ஆம் பக்கம் பார்க்க)

## கெப்பிட்டிக்கொல்லாவவில் இருவர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கெப்பட்டிக்கொல்லாவ திருவேகமைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் மீது நேற்றுக் காலை ஆயுததாரிகள் மேற்கொண்ட தாக்குதலில் இருவரும் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர்.

அரச துறை ஊழியர் மற்றும் ஊர்காவற் படை வீரர் ஆகியோர் மீதே இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை படையினர் மேற்கொண்டு வருவதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் தெரிவித்துள்ளது. (ச-5)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எவ்வித மாற்றமும் இல்லை!

## கண்காணிப்புக்குழு கருத்து

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக,எவ்வித மாற்றமும் தம்மைப் பொறுத்தவரை இல்லையென இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

(06 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் மீது அரசாங்கம் பொருளாதாரத்தால் தாக்குகிறது

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் மீது பதில் தாக்குதல் மேற்கொள்கின்ற அரசாங்கம், மக்கள் மீது பொருளாதாரத் தாக்குதல்களை மேற்கொள்கின்றது. எனவே வாழ்க்கைச் செலவு உயர்வதை குறைக்க போராட்டம் நடாத்த வேண்டியுள்ளது. இதற்கு மக்கள் ஜே.வி.பியுடன் இணைய வேண்டும் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கட்சி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, குறுகிய காலப் பகுதியில் அதிக தடவைகள் எரிபொருட்களின் விலைகளை அதிகரித்த பெருமை ராஜ (06 ஆம் பக்கம் பார்க்க)

## மடுத்தேவாலயப் பிரதேசத்தை சமாதான வலயமாக்கக் கோரிக்கை

(கொழும்பு)

மடுமாதா தேவாலயத்தையும் அதனை அண்டிய பிரதேசத்தையும் சமாதான வலயமாக பிரகடனப்படுத்த வேண்டுமெனக் கோரி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கீமூன் ,பாப்பரசர் 16 ஆவது ஆசீர்வாதப்பர் ஆகியோருக்கு ஐக்கிய தேசியக்கட்

## கிளிநொச்சியை நோக்கிய நகர்வுக்கு இராணுவத்தினர் தயார் நிலையில்

தமிழ் நெற் செய்தி

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டிலிருந்து விடுதலைப்புலி

மற்றும் நாகர்கோவில் கிழக்கு முன்னரங்க நிலைகளிலிருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கி எந்நேரமும் முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள

யினர் எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. படைநடவடிக்கைக்கான அனைத்து படை நகர்த்தல்களும் பின்தள வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டு நிறைவு

மாக பிரகடனப்படுத்த வேண்டுமெனக் கோரி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கீமூன், பாப்பரசர் 16 ஆவது ஆசீர்வாதப்பர் ஆகியோருக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெவர்த்தன கடிதங்களை அனுப்பியுள்ளார்.

ஜெயலத் ஜெவர்த்தன தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது, கத்தோலிக்க மக்கள் உட்பட (06 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் நெற் செய்தி

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டிலிருந்து விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகள் நோக்கிய பாரிய படைநடவடிக்கைகளுக்கு படைகள் தயாராகி விட்டன என உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வெளியாகியுள்ளதாக தமிழ் நெற் செய்தி வெளியிட்டுள்ளது. தென்மராட்சி மற்றும் நாகர்கோவில் கிழக்கு முன்னரங்க நிலைகளிலிருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கி எந்நேரமும் முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

படை நடவடிக்கைக்கான கட்டளை கொழும்பு இராணுவத் தலைமையகத்திலிருந்து எந்நேரமும் வரலாம் எனவும் படையினர் எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. படைநடவடிக்கைக்கான அனைத்து படை நகர்த்தல்களும் பின்தள வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டு நிறைவு காணப்பட்டுள்ளது.

குறிப்பாக படையினர் மற்றும் படைத் தளபாடங்கள் முன்னகர்த்தப்பட்டுள்ளதாக தமிழ் நெற் தெரிவித்துள்ளது. இதேநேரம் படுகாயமடையும் (06 ஆம் பக்கம் பார்க்க)

# கருணா குழுவினர் மீது பொத்துவிலில் தாக்குதல்

(அம்பாறை)

அம்பாறையிலிருந்து பொத்துவில் நோக்கி கருணா ஒட்டுக்குழுவினரை ஏற்றிச் சென்ற இரண்டு முச்சக்கர வண்டிகள் மீது இன்ஸ்பெக்டர் ஏற்றம் பகுதியில் வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து மூன்று உடல்களை அவர்கள் நேற்றுக் காலை கோமாரிப் பகுதிக்கு எடுத்துச்சென்றிருப்பதாகவும் ஏனைய மூன்று உடல்களும் சம்பவ இடத்தில் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. நேற்றைய இத் (06 ஆம் பக்கம் பார்க்க)

# நேர்மையாக பிரச்சினையைத் தீர்த்தால் ஆயுதம் வாங்கவேண்டிய தேவை இல்லை

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவுடன் உறவு வளரவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். இந்தியா பிராந்திய வல்லரசு மட்டுமல்ல. இந்தியா உலகத்திலேயே ஒரு மிகவும் முக்கியமான நாடாக இன்று திகழ்ந்து கொண்டிருக்கின்றது என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் சென்னையில் நேற்று முன்தினம் வெளியிட்ட கருத்துக்கள் குறித்து பி.பி.சிக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கையைப் பொறுத்தவரையில் இந்தியாதான் அண்டை நாடு. இங்கு வாழ்கின்ற மக்கள் அனைவரும் சிங்களம், தமிழ், முஸ்லிம் மக்களில் பெரும் (06 ஆம் பக்கம் பார்க்க)

# விமான எதிர்ப்பு ஒத்திகையால் களனியில் நள்ளிரவில் பதற்றம்

(கொழும்பு)

களனி மற்றும் கடவத்தைப் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு விமான எதிர்ப்புத் தாக்குதல் ஒத்திகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விமானப்படையினால் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல் ஒத்திகையின் போது;

சிறிய ரக விமானங்களை பறக்கவிட்டு கீழிருந்து பராவெளிச்சங்கள் ஏவப்பட்டன. அதன் பின் விமான எதிர்ப்பு கனரக ஆயுதங்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு ஒத்திகை பார்க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

எவ்வித முன்னறிவித்தலுமின்றி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கையினால் அப் பகுதி மக்கள் பதற்றமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. சிறியரக விமானங்களின் பறப்பினையடுத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமையால் விடுதலைப் புலிகளின் விமானங்களை நோக்கியே தாக்குதல் இடம் பெற்றதாக தாம் கருதியதாக அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)

# போர் நிறுத்த உடன்படிக்கையை உடனடியாக ரத்துச்செய்ய வேண்டும்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்படிக்கையின் எதிர்காலம் குறித்து ஆராய்வதற்கு ஒன்றும் இல்லை. காகித மட்டத்தில் உள்ள அந்த உடன்படிக்கையை அரசாங்கம் உடனடியாக கிழித்தெறிய வேண்டும். போர் நிறுத்த உடன்படிக்கையினால் நாட்டுக்கு எந்தப் பலனுமில்லை என்று நாட்டு மக்கள் உணர்ந்து விட்டார்கள்.

எனவே அரசாங்கம் மேலும் காலம் தாமதித்துக் கொண்டிருக்காமல் உடனடியாக போர்நிறுத்த உடன்படிக்கையை ரத்துச்செய்ய வேண்டும். இவ் விடயத்தில் அரசாங்கம் அதிகளவில் காலத்தை கடத்திவிட்டது. ரணில்-பிரபா உடன் (06 ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்த உடன்படிக்கையினை அரசு முடிந்தால் ரத்துச் செய்யட்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி சவால்

(கொழும்பு)

அரசாங்கம் முடியுமானால் போர்நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்யட்டும் பார்க்கலாம். அரசாங்கம் என்னதான் போர் நிறுத்த உடன்படிக்கை குறித்துக்குறை கூறினாலும் அதனை ரத்துச் செய்யமுடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கை நாட்டுக்கு நன்மையளிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

போர் நிறுத்தஉடன்படிக்கையின் தற்போதைய நிலைமை பரிதாபகரமாகவுள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் போர் நிறுத்த உடன்படிக்கை பலப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

போர் நிறுத்த உடன்படிக்கையின் எதிர்காலம் தொடர்பாக தீர்மானிக்கப் போவதாகக் கூறிக் கொண்டு அரசாங்கம் நாடகமாடுகின்றது என்றும் அவர் கூறினார்.

போர் நிறுத்த உடன்படிக்கையின் எதிர்க்காலம் குறித்துத் தீர்மானிக்க வேண்டிய காலம் வந்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது,

போர் நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்யும் செயற்பாடு மிகவும் இலகுவானது. 14 நாள்களுக்கு முன்னர் நோர்வே நாட்டிற்கு அறிவித்தால் போதுமானது. ஆனால் அரசாங்கம் போர் நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்யும் நிலையில் இல்லை.

போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக மீள் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல 6 தடவைகள் கூறிவிட்டார். ஆனால் அதற்கு அப்பால் எதனையும் செய்வதாகத் தெரியவில்லை.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவும் வெளிநாடுகளுக்குச் சென்று போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக விமர்சனம் செய்வதாகத் தெரிகின்றது. இவ்வாறு போர் நிறுத்த உடன்படிக்கையை விமர்சிக்கும் அரசாங்கம் இதுவரை ஏன் அதனை ரத்துச் செய்யவில்லை என்ற கேள்வியை எழுப்புகின்றோம்.

ஐக்கியதேசியக் கட்சி தெளிவான நிலைப்பாட்டில் உள்ளது. போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக அரசாங்கம் என்ன முடிபை வேண்டுமானாலும் எடுக்கலாம். நாங்கள் அதற்கு இடையூறாகவிருக்க மாட்டோம்.

எமது கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே போர் நிறுத்தஉடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதன்மூலம் இந்த நாடு பல நன்மைகளைப் பெற்றது. முக்கியமாகக் கொழும்பில் குண்டுகள் வெடிக்கவில்லை. மக்கள் நிம்மதியாக வாழ்ந்தனர்.

அத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்குப் போர்நிறுத்தஉடன்படிக்கை அடித்தளமாக அமைந்தது. ஆனால் எமது ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் போர் நிறுத்த உடன்படிக்கைச் செயலிழந்தது.

தற்போதைய நிலைமையிலும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் போர் நிறுத்த உடன்படிக்கையை சீராக அமுல்படுத்தப்பட வேண்டியது கட்டாயமாகும். அரசாங்கம் இரட்டை வேடம் போட்டுக் கொண்டிருக்கின்றது என்றார். (ச)

## இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் மாதாந்த இசை நிகழ்ச்சி, மன்றக் கலாமண்டபத்தில் நாளை மாலை 3 மணிக்கு மகாராணி க.சோமசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச)

## அதிபர்களுக்கான நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணத்தில் இலங்கை அதிபர் சேவை வகுப்பு தரம் 2 தரம்II ற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகும் என வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

மேற்படி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட 540 பேருக்கு தினம் ஒன்றுக்கு 60 பேராக 9 நாள்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.(ச–5)

## குருபூஜை விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிப் பிரதேசத்தில்-நுணாவில் ஸ்ரீ வீரபத்திரர் ஆலய அறநெறிப் பாடசாலையில் நடாத்தப்படும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூஜை விழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அபிவிருத்தி உதவியாளர் செல்வி மகிந்தினி சீவகாருணியம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (ச)

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மேலும் 18 மாணவர்களுக்கு அழைப்பு

(வவுனியா)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 'வெயிற்றிங் லிஸ்ட்' மூலம் புதிதாக இணைக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்களின் பெயர் விபரங்களைக் கல்லூரிப் பீடாதிபதி கே.பேர்ணாட் அறிவித்துள்ளார்.

இவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட மாணவர்கள் ஒருவார காலத்திற்குள் தமது பதிவுகளை மேற்கொண்டு கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறும் பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டும் பதிவை மேற்கொள்ளாத மாணவர்களின் அனுமதி இரத்துச் செய்யப்பட்டு அடுத்துள்ள மாணவர்கள் இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதியுடன் மேற்படி மாணவர்களை இணைப்பது நிறுத்துமாறு அறிவிக்கப்பட்ட போதும் யாழ்.மாணவர்களுக்காகத் தாம் இச் சலுகைகளை வழங்குவதாகவும் பீடாதிபதி கே.பேர்ணாட் குறிப்பிட்டார்.

புதிதாக அனுமதி வழங்கப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு,

ஆரம்பக் கல்வி:- வி.வினிதா (குளப்பிட்டி வீதி, கொக்குவில்), ஏ.விஜிதா (சுழிபுரம் மத்தி), என்.தர்ஷினி (இணுவில் தெற்கு), என்.சிவலோஜினி(தாவளை இயற்றாளை),ரி.தம்பையா(மட்டுவில் வடக்கு,சந்திரபுரம்),ஆர்.டெனிஸ்ரன்(கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறை), ஆர்.கல்பான (சர்வோதயா வீதி, ஆவரங்கால் மேற்கு),

யு.பிரியதர்ஷினி(நாவற்காடு வரணி), பி.வத்சலா(பலாலி வீதி, கந்தர்மடம்), இ.காயத்திரி(கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்),

விஞ்ஞானம்:- எஸ்.கிருஷ்ணகாந்தன் (ஆவொலை தெரு, புலோலி மத்தி), ஜி.கௌசல்யா(சுங்கிலியன் வீதி, நல்லூர்), வி.வினோத் (கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி), வி.ஆரணி (சுண்டுக்குளி), பி.சுர்ராஜ்(அளவெட்டி தெற்கு),

விவசாயம்:- எஸ்.சுரேஸ்குமார் (அம்மன் கோவிலடி மட்டுவில் மேற்கு), கே.விஜயதீபன் (செங்குந்தார் வீதி, கரவெட்டி கிழக்கு),

உடற்கல்வி :- எம்.எம்.அலிகா (லோட்டஸ் வீதி, தும்பளை). (ச–5)

# பால்மாக்களின் விலை நேற்றுமுதல் அதிகரிப்பு

பால்மாக்களின் விலைகள் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. நிவாரண அடிப்படையில் விசேட அமைப்புக்களுக்கு வழங்கப்படும் 400 கிராம் லக்ஸ்பிறேயின் விலை ரூபா 145.50 இருந்து ரூபா 152 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

விற்பனைக்குப் பயன்படுத்தப்படும் 400 கிராம் லக்ஸ்பிறே பால்மா ரூபா 154இல் இருந்து ரூபா 180 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

400 கிராம் ஹலண்ட் பால்மா ரூபா 140 இல் இருந்து ரூபா 180 ஆகவும், 400 கிராம் டைமன்ட் பால்மாவின் விலை ரூபா 180 இல் இருந்து ரூபா 207 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

400 கிராம் சன்வே பால்மாவின் விலை ரூபா 145 இல் இருந்து ரூபா 180 ஆகவும், 400 கிராம் லக்சதோச பால்மாவின் விலை ரூபா 141 இல் இருந்து ரூபா 180ற்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

உலக சந்தையில் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டதன் காரணமாகவே இவ்விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் இதனைத் தவிர்க்க முடியாது எனவும் வர்த்தக மற்றும் நுகர்வோர் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.(ச–3)

# எந்த நாட்டிடமிருந்தும் ஆயுதங்களைப் பெற எமது நாட்டிற்கு பூரண சுதந்திரம் உண்டு

## முன்னாள் வெளியுறவுச் செயலர் செவ்வி

(கொழும்பு)

இந்தியா, இலங்கைக்கு உதவக் கூடிய சூழலை இலங்கை அரசாங்கம் உருவாக்காமல் உள்ளது.அரசாங்கம் தமிழ் மக்களையும் விடுதலைப்புலிகளையும் குழப்பிக் கொள்கின்றது.

இதற்கு அரசியல் தீர்வுத் திட்டம் அவசியம். மாகாண சபையை விட கூடிய அதிகாரப் பகிர்வு அவசியம் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஓய்வு பெற்ற இணைச் செயலாளர் நந்தகொட தெரிவித்தார்.

எந்த நாட்டிடமும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் உரிமை எங்களுக்கு இருக்கின்றது. இலங்கை இறையாண்மையுள்ள நாடு. நாட்டைப் பாதுகாக்க எவரிடமும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யலாம். எங்களுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் வரும்பொழுது அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்கின்ற உரிமை இருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அதில் மேலும் தெரிவித்ததாவது,

முன்னர் யாழ்ப்பாணத்தில் சிக்கிக் கொண்ட படையினரை மீட்பதற்கு இந்தியா கப்பல்களை வழங்க முன்வந்தபோதும் நாங்கள் சீனாவிடமும் பாகிஸ்தானிடமும் உதவிகளைப் பெற்றோம்.

அன்று பாகிஸ்தான் உதவியிருக்காவிட்டால் இந்த நாடு பிளவுபட்டிருக்கும். எந்த நாட்டிடமும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் உரிமை எங்களுக்குஇருக்கின்றது. ஆனால் நாங்கள் சீனாவிடமும் பாகிஸ்தானிடமும் கொண்டுள்ள உறவு இந்தியாவைப் பாதிக்கக் கூடாது.

இந்தியா இரத்த உறவு கொண்டுள்ள நாடு. இந்தியா தற்காப்பு ஆயுதம் பற்றிப் பேசுகின்றது. துப்பாக்கியும் தற்காப்பு ஆயுதம்தான். இந்தியாவால் வெளிப்படையாக ஆயுதங்களைத் தர முடியாது.

காரணம் தமிழகத்தில் எதிர்ப்புக்கள் கிளம்பும். பிராந்தியத்தில் இந்தியா வல்லரசு என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் இலங்கையில் மோதல்கள் அதிகரிக்கின்ற நிலையில் இந்தியா அதனைப் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

இங்கு கடற்புலிகள் பிரச்சினையுள்ளது. ஆனால் இந்தியா கூட்டு ரோந்து முயற்சியை மறுத்துள்ளது. 1971 ஆம் ஆண்டு பிரச்சினை தொடங்கிய காலத்திலிருந்து சீனாவும் பாகிஸ்தானும் ஆயுதங்களை வழங்கி வருகின்றன.

அந்நாடுகள் ஆயுதங்களை வழங்கினாலும் பணத்திற்காக அழுத்தம் கொடுப்பதில்லை .எமது பிரச்சினைகளில் தலையிடுவதும் இல்லை என்று தெரிவித்தார். (ச–5)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் நாளைக் காலை 10.30 மணியளவில் ஈச்சமோட்டையில் அமைந்துள்ள சங்கப் பணிமனையில் சங்கத்தின் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் 2006/2007 ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்ட விதிகளில் இடம்பெற்றுள்ள மாற்றங்கள் குறித்த விளக்கங்கள் அளிக்கப்படவுள்ளன.

மேலும் புதிய மத்தியஸ்தர்களை சங்கத்தில் இணைத்துக் கொள்வது தொடர்பாகவும் 2007 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டம் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளமையினாலும், அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு சங்கத் தலைவர் கப்டன் டி.ஏ.எம்.குணசிங்கம் கேட்டுள்ளார். (ச–110)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர், பொது முகாமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தலைவர், பொதுமுகாமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (அ)

# மனநோய் வைத்தியர்களுக்கு இலங்கையில் பற்றாக்குறை

(கொழும்பு)

நாட்டில் மன நோய் வைத்தியர்களின் பற்றாக்குறை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இப் பற்றாக்குறையைத் தீர்த்து வைக்கும் முகமாக விசேட வேலைத் திட்டம் ஒன்றை சுகாதார அமைச்சு ஆரம்பித்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் நேற்று 46 வைத்தியர்களுக்கு உளவள கற்கை நெறி ஒன்று கொழும்பு மருத்துவப் பட்டப் படிப்புக்கள் பின் படிப்பு நிலையத்தில் சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

உளவள கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு வெளிநாடுகளுக்குச் செல்லும் வைத்தியர்கள் மீண்டும் இலங்கைக்குத் திரும்பாதபடியினால் இத்துறையில் வைத்தியர்களின் பற்றாக்குறை நிலவுகின்றது என்று அவர் தெரிவித்தார். (ச–3)

## மணமகன் தேவை

யாழ்.இந்து உயர் வேளாளர் குடும்பம், 29 வயது, அரச சேவையிலுள்ள பட்டதாரி, 2இல் செவ்வாயுள்ள மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. சைவ போசனம் விரும்பத்தக்கது.

தொடர்பு:-

222 9196

077 6039020

(098)

# சேடம் இழுக்கும் யுத்தநிறுத்த ஒப்பந்தம் தானம் கொடுத்து மோட்சம் அனுப்பமுயற்சி



2002 பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி இலங்கையின் வரலாற்றில் மறக்கமுடியாத நாள். அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே போர்நிறுத்த உடன்படிக்கை அன்றுதான் கைச்சாத்திடப்பட்டது.

நோர்வேயின் விசேட சமாதானத்தூதுவர் எரிக்சொல்ஹெய்மின் அயராத முயற்சியால் ஒப்பந்தம் நிறைவேறியது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வன்னித் தலைமையகத்தில் வைத்தும், அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வவுனியா செயலகத்தில் வைத்தும் உடன்படிக்கையில் ஒப்பமிட்டனர்.



இருதரப்பின் சீராக்கங்களுடன் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கை, விசேட உலங்கு வானூர்தி மூலம் வன்னிக்கும் கொழும்பிற்கும் எடுத்துச் செல்லப்பட்டு இரு தரப்புத் தலைவர்களின் கையொப்பமும் பெறப்பட்ட நிகழ்வு கனகச்சிதமாக நிறைவேறியது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச் சாத்தான செய்தி வெளியாகியதும் மக்கள் வெடி கொளுத்தி ஆரவாரம் செய்யாவிடினும், உள்ளூர உவகை கொண்டனர்.

கடந்த இரு தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தத்திற்கு முடிவு கிட்டிவிட்டது.

சமாதானத்தின் கிடைப்பனவை அனுபவிக்கப் போகின்றோம் என்பதே அந்த உவகையின் வெளிப்பாட்டிற்கான காரணமாகும்.



## ஏ-9 பாதை திறக்கப்பட்டது

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் முதற் பயன் யாழ்ப்பாணக் குடாநாட்டையும், வெளியிடங்களையும் இணைக்கும் தரைவழிப் பாதையான ஏ-9 பாதை திறக்கப்பட்டதாகும்.

ஏ-9 தடைப்பட்டிருந்த காலத்தில் குடாநாட்டு மக்கள் கடல், ஆகாய வழிப் பயணத்தை மேற்கொண்டனர். கிளாலிக் கடலினூடாகப் பயணம் மேற்கொண்டவர்கள் பட்ட துன்பங்கள் சொல்லுந்தரமன்று.

இரவு வேளையில், கடற்படையினரின் கண்ணில் படாமல் பயணிக்கும் அந்த இருள் சூழ்ந்த பயணத்தில், மனிதக் குருதியால் கிளாலிக் கடல்நீர் நிறம் மாறிப் போனதை எவருமே மறந்திருக்கமாட்டார்கள்.

இந்த இழப்புகளெல்லாம் போர்நிறுத்த உடன்படிக்கையோடு – ஏ-9 பாதை திறக்கப்பட்டதோடு நின்று போனதாகவே கருதப்பட்டது. ஏ-9 பாதை திறக்கப்பட்ட அதேநேரம் பொருளாதாரத்தடையும் நீங்கியது. குடாநாட்டு மக்களின் அன்றாட தேவைகளுக்கான பொருட்கள், தரைவழியாக வந்து சேர்ந்தன.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதும், தென்னிலங்கை சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்தை தமது சுற்றுலாப் பிரதேசமாக தெரிவுசெய்தனர். நாகவிகாரைக்கு வருகை தருவதோடு, யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளைப் பார்வையிடுவதையும் அவர்கள் மனநிறைவாகக் கொண்டனர்.

சிங்கள மக்கள் வடபுலத்துத் தமிழ் மக்கள் படும் அவலத்தை புரிந்துகொள்வதற்கும், அதன்மூலம் சமாதானம் வலுப்படுவதற்குமான சாத்தியப்பாட்டை ஏ-9பாதை ஏற்படுத்தியுள்ளது என்ற நம்பிக்கையும் மேலோங்கியது.

கூடவே, சமாதானத்திற்காகப் பாடுபடும் அரச சார்பற்ற அமைப்புகள் தமிழ்-சிங்கள மாணவர்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கில் "நட்புறவுப் பாலம்" என்ற நிகழ்ச்சித் திட்டத்தை உருவாக்கின. அதன் விளைவாக வடபுலத்து மாணவர்கள் தென்பகுதிக்குச் சென்று சிங்கள மாணவர்களுடன் கைகோர்த்தனர்.

அதேபோல், சிங்கள மாணவர்கள் வடக்கிற்கு வந்து தமிழ் மாணவர்களுடன் கலந்துரையாடினர். இளம் சிறார்களிடையே இடம்பெற்ற நட்புறவுப் பாலம் எதிர்கால இலங்கையின் ஒற்றுமைக்கான பாலமாகக் கருதப்பட்டது.

இவை மாணவர்கள் மத்தியில் இடம்பெற, மறுபுறத்தில், இலக்கியப் படைப்பாளிகள், கலைஞர்கள் ஒன்றுசேர்ந்து வடக்கிலும் தெற்கிலும் ஒன்று கூடல் நிகழ்வுகளை நடத்தினர்.

தென்பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் அத்துமீறி நுழைந்த ஜே.வி.பியினர் தாக்குதல் நடத்தியதும் அவர்களின் தாக்குலில் இருந்து அரங்கில் அமர்ந்திருந்த தமிழர்களைப் பாதுகாப்பதற்காக சிங்கள இளைஞர்கள் ஜே.வி.பி.யினரை எதிர்கொண்டதும் நடந்து முடிந்த நிஜங்கள்.

## பேச்சுவார்த்தை ஆரம்பம்

உடன்படிக்கை கைச்சாத்தானதையடுத்து அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்



னெடுப்பதற்கான முயற்சியில் நோர்வேத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தீவிரமாக ஈடுபட்டார். அதன் பயனாக ஆறு சுற்றுப்பேச்சுக்கள் நடைபெற்றன.

## குருஷேத்திரம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் அப்போதைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க சமாதானத்தை ஏற்படுத்துவார் என்ற நம்பிக்கை வலுப்பெற்றது. எனினும் பேச்சு மேசைகளில் எட்டப்பட்ட விடயங்களை அமுல்படுத்துவதில் அரசு காட்டிய அசமந்தப் போக்கு பேச்சுக்களின் தொடர்ச்சிக்கு, பங்கமாக அமைந்தது.

இந்நேரத்தில் அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்கவின் அரசு மீது நம்பிக்கை இழந்ததாகக்கூறி தன்னிடமிருந்த அதிகார அஸ்திரத்தை ஏவினார் அவ்வளவுதான். நடுச்சாமத்தில் ஏவிய அஸ்திரம் பொதுத் தேர்தலாக வெடித்தது.

## பாரிசவாதப் படுக்கையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை

அரசும், விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையைக் கண்காணிப்பதற்காக வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய கண்காணிப்புக்குழுவும் அமைக்கப்பட்டது.

இருதரப்பில் யார் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறுகின்றார்களோ, அதுபற்றி அவர்களுடன் பேச்சு நடத்தி உடன்படிக்கைக்கு ஊறு விளைவிக்காமல் பாதுகாப்பதே கண்காணிப்புக்குழுவின் பணியாகும்.

எனினும், கண்காணிப்புக் குழுவிற்கு எதுவித அதிகாரமும் வழங்கப்படாமையினால் அதன் பணி தோல்வியில் முடிவுற, யுத்த நிறுத்த உடன்படிக்கை பாரிசவாதம் வந்தது போல் படுத்துக்கொண்டது.

சட்ட வல்லுநர்கள், வெளிநாட்டு ஆலோசகர்கள் எனப் பல்துறைசார் வல்லுநர்களின் வழிகாட்டலில் இறுக்கமான விதிமுறைகள் வகுக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை பாரிசவாதத்தால் படுத்த போதிலும், அதற்கு "பிசியோ திரப்பி" வழங்கி அதனை நிமிர்த்தி விடுவதற்காக, நோர்வே அரசு படாதபாடுபட்டது. இருந்தும் அதனை நிமிர்த்த முடியாமல் போயிற்று.

## சேடம் இழுக்கும் சீவன் போகாது

எத்தனையோ பாடுகளின் பயனாக உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை பாரிசவாதத்தால் படுத்துக்கொண்டாலும், படுக்கையில் இருந்தும் பேசிக்கொண்டது. என்னை மீறிவிடாதீர் என்று இரு தரப்பிற்கும் உரத்துக்கூறியது.

படுக்கையில் விழுந்தவன் பேச்சு பல்லக்கிலா ஏறமுடியும் இல்லவே இல்லை. பாரிசவாதத்தில் கிடந்தாலும் வாய் பேசாமல் இருக்கவேண்டும் என ஒரு சாரார் விரும்பினர். அதற்கான ஒரேவழி, ஏ-9 பாதையை மூடிவிடுவதே என முடிவு எடுத்தனர்.

## விதுரன்

2006 ஆகஸ்ட் 11ஆம் திகதி அந்தத் திட்டம் அமுலாக பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை சேடம் இழுக்கும் பரிதாப நிலைக்கு ஆளானது. இப்போது சேடம் இழுக்கும் உடன்படிக்கை சீவனோடிருப்பதும் நல்லதல்ல என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதற்காக தானம் கொடுத்து யுத்த நிறுத்த உடன்படிக்கையின் சீவனை மோட்சத்திற்கு அனுப்பும் முயற்சிகள் நடக்கின்றன. இன்னமும் இரு வாரங்களில் தானம் கொடுத்து சீவன் மோட்சம் அனுப்பப்படும்.

யாரோடு யார் நோவது, நோர்வேயின் சமாதான முயற்சி முற்றுப்பெறுகிறது. போர் முரசத்தின் ஒலி வேகமெடுக்கிறது.

---

# எட்டாம் வகுப்பு வரலாற்று புத்தகத்தில் திரிபுகள் திருத்தப்படவில்லையென விசனம்

எட்டாம் தர வரலாற்று பாடப்புத்தகத்தில் ஐரோப்பாவின் இருண்டகாலமும் இஸ்லாம் பரவியமையும் உலகில் அதன் தாக்கங்களும் என்ற பாட அலகில் முஸ்லிம்கள் பற்றியும் இஸ்லாம் பற்றியும் திரிபுபடுத்தி எழுதப்பட்டுள்ள விடயங்கள் சென்ற வருடம் கல்வியமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டும் இதுவரைக்கும் அத்தவறுகள் அப் பாட அலகில் திருத்தம் செய்யப்படாமை குறித்து கடும் கண்டனம் தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம்கள் என்றபடியாலே இவ்விடயம் கல்வியமைச்சராலோ கல்வி அதிகாரிகளாலோ பெரிதாக அலட்டிக்கொள்ளப்படவில்லை என்றும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற வருடம் ஸ்ரீ.ல.மு.கா.பொதுச் செயலாளர் எம்.ரீ.எம்.ஹசன் அலி (தற்போதைய பிரதியமைச்சர்) பாராளுமன்றத்தில் இந்த விடயம் பற்றி உரையாற்றிய போது கல்வியமைச்சர் இதுதொடர்பாக உடனடியாகக் கவனம் செலுத்தப்படும் என்று உறுதியளித்திருந்த நிலையிலும் இப்பாட அலகில் முஸ்லிம்கள் தொடர்பாக விதைக்கப்பட்டுள்ள நச்சுக் கருத்துக்கள் எதுவும் நீக்கப்படாமையானது முஸ்லிம் விரோதப் போக்கைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

இதேவேளை, 'மத்திய கால ஆசியாவின் அரசியல் கலாசார அபிவிருத்தி இஸ்லாத்தின் பரவலும் அதனால் இந்தியாவில் உண்டான விளைவுகளும்' எனும் பாட அலகில் எழுதப்பட்டுள்ள முஸ்லிம் விரோதப் போக்குத் தொடர்பான வரலாற்றுச் சம்பவங்களும் இதுவரையில் திருத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## பரிசு தினம்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பரிசு தின விழா இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் கே.கணேஷ் கலந்துகொள்ளவுள்ளார். (அ)

# 6 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு

அரசாங்கத்துறையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் புதிதாக 6ஆயிரம் பேர் அடுத்த மாதம் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி அரசாங்க முகாமைத்துவ இணைந்த சேவைகளில் 4 ஆயிரம் பேரையும் கிராமசேவகர்களாக 2ஆயிரம் பேரையும் இணைத்துக்கொள்வதற்கான முன்னோடி நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெற்று வருவதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

முகாமைத்துவ இணைந்த சேவைகளில் 4 ஆயிரம் பேரை இணைத்துக் கொள்வதற்காக கடந்த ஜனவரி மாதம் போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

அதேவேளை நாடளாவிய ரீதியில் நிலவும் கிராமசேவை அதிகாரிகளின் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் கிராமசேவையாளர்களுக்கான போட்டிப்பரீட்சை கடந்த சில மாதங்களுக்கு முன் நடாத்தப்பட்டது.

விடைத்தாள்கள் திருத்தும் நடவடிக்கைகள் இம்மாதத்தில் நிறைவு பெற்றதும் அடுத்த மாதம் தகைமையானவர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். (அ)

# புலமைப்பரிசில் வழங்க ஏற்பாடு

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் கல்வி கற்கும் மாணவர்கள் 1000 பேருக்கு 6000ரூபாய் பெறுமதி வாய்ந்த புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினை இந்த ஆண்டு முதல் ஆரம்பிக்கவுள்ளதாகவும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் சமூகசேவை சமூக நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது.

தாய், தந்தையரை இழந்த பிள்ளைகள் மற்றும் முப்படையில் சேவையாற்றுபவர்களின் உறவினர்கள், வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தத்தினால் உயிரிழந்தவர்களின் இரத்த உறவுகள், குறைந்த வருமானம் பெறுவோர், திறமை காட்டிய மாணவர்கள் ஆகியோர் இந்த புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பம் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# இன்று ஒரு தகவல்

## இல்லத்தரசிகள்

ஒருவர் ரொம்பப் பெருமையாகச் சொன்னார் "என்னுடைய இல்வாழ்க்கையிலே... என் மனைவியோடு ஒரேயொரு தடவைதான் சண்டை வந்திருக்கிறது"

"எப்பொழுது?" என்று கேட்டேன்.

"கல்யாணத்துக்கு மறு நாள்" என்றார்.

"அதற்கப்புறம் சண்டையே வரவில்லையா?" என்றேன்.

"இல்லை" என்றார்.

"அது எப்படி?" என்றேன்.

"அப்பொழுது ஆரம்பித்த அந்த முதல் சண்டையே இன்னும் முடியவில்லையே..." என்றார்.

எனக்குச் சிரிப்பு வந்தது. என்னைச் சிரிக்க வைப்பதற்காக அவர் அப்படிச் சொல்கிறாரே தவிர, அவர் உண்மையிலேயே இல் வாழ்க்கையை மிகவும் சிறப்பாக நடத்தி வருபவர்.

ஒரு குடும்பம் நன்றாக இருக்கிறதென்றால் அதற்கு இல்லத்தரசிகள் தான் காரணம். இயற்கையாகவே பெண்களுக்கென்று சில சிறப்பான குணங்கள் உண்டு.

ஒரு முறை பவேரிய நாட்டு அதிபருக்கும் ஜேர்மன் சக்கரவர்த்திக்கும் தகராறு வந்தது. ஜேர்மன் சக்கரவர்த்தி என்ன செய்தாரென்றால் ஒரு பெரிய படையைத் திரட்டி பவேரியாவின் தலைநகரை சுற்றிவளைத்துவிட்டார்.

அப்படியும் அவரது கோபம் அடங்கவில்லை. பவேரிய தலைநகரைத் தரைமட்டமாக்க வேண்டுமென தீர்மானித்தார். அந்தசமயத்தில் அவர் மனதிலே ஓர் ஓரமாகக் கொஞ்சம் இரக்கம் தலைகாட்டியது. உடனே ஓர் அறிவிப்பு விடுத்தார்.

"பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் மட்டும் விதி விலக்கு அளிக்கிறேன். அவரவர்கள் முதுகிலே சுமக்கக்கூடிய அளவு பொருளை எடுத்துக் கொண்டு வெளியேறலாம்" என அறிவித்தார்.

பின், தனது படைத்தலைவர்களை அழைத்து பெண்களெல்லாம் தட்டுமுட்டச் சாமான்களுடன் வெளியேறியவுடனே தலைநகரை கொளுத்திவிடுமாறு உத்தரவிட்டார்.

கொஞ்ச நேரத்திலே பவேரிய நாட்டுப் பெண்கள் எல்லோரும் ஒவ்வொருவராகத் தட்டுத்தடுமாறி வெளியே வந்து கொண்டிருந்தார்கள். இதனைச் சக்கரவர்த்தி பார்த்தார். அவருக்கு அதிர்ச்சி!

பவேரிய நாட்டு பெண்கள் முதுகிலே சுமந்து வந்தது வீட்டுப் பொருட்களை அல்ல, வீட்டுக்காரர்களை! அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது கணவன்மார்களை முதுகிலே சுமந்துகொண்டு வந்தார்கள். கடைசியில் பவேரிய நாட்டு மன்னனை அவனுடைய ராணி முதுகிலே சுமந்தபடி தள்ளாடிக்கொண்டு வந்துகொண்டிருந்தார்.

இதைப் பார்த்ததும் ஜேர்மன் சக்கரவர்த்தியின் மனம் நெகிழ்ந்தது. பவேரியாவுக்கு மன்னிப்பு அளித்துவிட்டு தனது படைகளுடன் திரும்பிவிட்டார். மனைவியின் பெருமை என்பது இதுதான்! இருந்தாலும் இந்தக் காலத்திலே இந்த அளவுக்கு நடக்குமா என்பது சந்தேகம் தான்!

அது மாதிரி ஒரு நிலைமை இப்பொழுது வந்து உங்களால் முடிந்த அளவுக்கு முதுகிலே சுமந்துகொண்டு போங்கள் என்று சொன்னால் பெரும்பாலானவர்கள் சுமந்துகொண்டு போவது தொலைக்காட்சிப் பெட்டியாகத்தான் இருக்கும்.

அண்மையிலே மெக்சிக்கோவிலே குடும்பத் தலைவிகளெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு போராட்டம் நடாத்தினார்களாம்!

அது என்ன போராட்டம் என்றால்... ஒரு நாள் வீட்டு வேலையை அடியோடு நிறுத்திவிட்டார்களாம்! அவரவர்களுடைய கணவன்மார்களை சமையல் வேலை உட்பட சகல வேலைகளையும் செய்ய வைத்து அதைப் பார்த்து சந்தோஷப்பட்டார்களாம்.

எதற்காக இப்படிச் செய்தீர்கள் என்று கேட்டால் "வீட்டு வேலை என்பது குடும்பத்துக்கு மட்டுமல்ல, சமுதாயம் முழுவதற்கும் மிகவும் முக்கியமானது என்பதை உணர்த்துவதற்காகத்தான் இந்தப் போராட்டம்" என்றார்களாம். மெக்சிக்கோ நகராட்சியின் பெண்கள் சம உரிமை இயக்கம் தான் இந்தக் கிளர்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்ததாம்.

நம் ஊர்களிலெல்லாம் அந்த அளவுக்குப் போராட்டமே அவசியமில்லை. ஏனென்றால் ஏற்கனவே பலபேர் வீட்டு வேலைகளையெல்லாம் பொறுப்பாகச் செய்து கொண்டிக்கிறார்களே! ஓர் அம்மா தன்னுடைய கணவனைப் பற்றி ரொம்பக் குறைப்பட்டுக் கொண்டிருந்தார்.

"எப்ப பார்த்தாலும் நீங்கள் என்னுடைய வீடு... என்னுடைய பங்களா... என்னுடைய கார்...என்னுடைய தோட்டம்... என்றுதான் சொல்கிறீர்கள்... எப்பொழுதாவது நம்முடையது என்று சொல்லியதுண்டா?" என்று கேட்டாராம்.

கணவர் பார்த்தார்! "சரி சொல்கிறேன்... நம்முடைய வேட்டி எங்கே?... எடுத்துவா" என்றாராம்!

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கணிதத்தில் திறமையா? காட்டிவிடும் சுட்டுவிரல்

கணிதம் மற்றும் மொழிப் பாடங்களில் சிறுவர், சிறுமிகளுக்கு இயற்கையாக உள்ள திறனை அவர்களின் விரல்களின் நீளத்தைக் கொண்டு அறிந்து கொள்ளலாம் என்று ஒரு ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

பிரிட்டனில் பாத் என்ற நகரில் உள்ள பல்கலைக் கழகத்தில் உளவியல் துறையில் பணியாற்றுபவர் டாக்டர் மார்க் புரோஸ்னான். இவர் சைக்காலஜி என்ற பத்திரிகையில் ஒரு ஆய்வு அறிக்கையை வெளியிட்டுள்ளார். அதில் கூறியிருப்பதாவது,

ஆறு வயதுமுதல் ஏழுவயது வரை உள்ள 75 சிறுவர், சிறுமியர் இதற்கான ஆய்வில் ஈடுபடுத்தப் பட்டனர். கைவிரல்களின் நீளத்துக்கு ஏற்றவாறு அவர்களின் கணிதம் மற்றும் மொழிப் பாடங்களின் திறமை வெளிப்படுகின்றது என்பது தெரியவந்துள்ளது. மோதிர விரலை விட நீளம் குறைவாக உள்ள சுட்டு விரலைக் கொண்ட சிறுவர்கள் கணிதத்தில் திறமையானவர்களாக உள்ளனர். சிறுமிகளில் மோதிர விரல் மற்றும் சுட்டு விரல் ஒரே அளவாக இருந்தால் அவர்கள் மொழிப் பாடங்களில் மிகவும் சிறப்பாக செயல்படுகின்றனர்.

இவ் விரல்களின் அளவுகள் மாறுபட்டு இருந்தால் தோற்றத்தில் தனித்தன்மை, விளையாட்டுத் திறன், அவர்களுக்கு உடல் ரீதியாக ஏற்படும் சிக்கல் ஆகியவை குறித்து அறியவே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. விரல்களின் அளவுகள் மாறுபட்டு இருந்தால் படிப்பில் படு சுட்டியாக உள்ள தன்மை இயற்கையாகவே அமைந்து விடுகிறது என்பது தற்போது தெரியவந்துள்ளது.

தாயின் கர்ப்பப்பையில் இருக்கும்போதே குழந்தைகளின் விரல்களின் நீளம் டிவு செய்யப்பட்டு விடுகிறது. இதை டெஸ்டிரடோன் மற்றும் எஸ்ட்ரோஜென் ஆகிய சுரப்பிகள் தான் டிவு செய்கின்றன. இதில் டெஸ்டிரடோன் சுரப்பிகள் அதிகளவில் செயல்பட்டால், மோதிர விரலைவிட சுட்டு விரலின் நீளம் குறைவாக இருக்கும். எஸ்ட்ரோஜென் சுரப்பிகள் அதிகளவில் செயல்பட்டால் இரு விரல்களின் நீளம் ஒரே அளவில் இருக்கும். இவ்வாறு ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.- (அ-5)


# அயர்லாந்தில் அதிசயக் கழுகு

அயர்லாந்து நாட்டில் நூறு ஆண்டுகளுக்கு பிறகு, ராட்சத கழுகு ஜோடி ஒன்று குஞ்சு பொரித்துள்ளது. இது அந்த நாட்டில் அதிசயமாகக் கருதப்பட்டு அதனால் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அயர்லாந்து மற்றும் ஸ்காட்லாந்து ஆகிய நாடுகளில் 'கோல்டன் ஈகிள்' என்ற ராட்சத கழுகுகள் பிரசித்தி பெற்றவை. இவ்வகை கழுகு தனது இறக்கையை முழுமையாக விரித்தால் 1.8 மீற்றர் அளவுக்கு அதாவது 5 அடி நீளத்திற்கு மிக பிரமாண்டமாக இருக்கும். வேட்டையாடுவதில் பிரியம் கொண்டவர்களும், அவற்றின் முட்டைகள் மீது ஆர்வம் கொண்டவர்களும் போட்டி போட்டு தங்கள் திறமையை காட்டியதன் விளைவாக இந்தவகைப் பறவை இனமே காணாமல் போய்விட்டது.

இது நூறாண்டுகளாக உள்ளமை கடந்த 1950ஆம் ஆண்டு ஸ்காட்லாந்து நாட்டில் இருந்து ஒரு கழுகு ஜோடி வடக்கு அயர்லாந்து பகுதிக்கு இடம்பெயர்ந்தது. 2001ஆம் ஆண்டில் ஆண் கழுகுகள் ஸ்காட்லாந்து நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டன.சில வாரங்களுக்கு முன் பெண் கழுகு ஒன்று முட்டைகளை இட்டது. இதில் இரண்டு முட்டைகளில் இருந்து குஞ்சுகள் வெளிவந்தன. இதில் ஒரு குஞ்சு பிறந்த 5 நாட்களில் இறந்துவிட்டது. மற்றொரு கழுகு குஞ்சை அயர் லாந்து நாட்டின் தேசிய பூங்கா நிர்வாகிகள் பொத்தி பொத்தி பாதுகாத்து வருகின்றனர்.

குஞ்சு பொரித்து 8 வாரங்களுக்குப் பிறகுதான் அதன் முழு விவரத்தையும் வெளியிடுவோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். நூறு ஆண்டுகளுக்கு பிறகு ராட்சத கழுகு குஞ்சு பொரித்துள்ளது. அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ-5)



மாகாண மட்ட வலைப்பந்தாட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 15 வயது அணியினர், அதிபர் அ.அகிலதாஸ், உப அதிபர் எஸ்.சிவலிங்கம், பயிற்றுனர் திருமதி கு.ராஜேஸ்வரன் ஆகியோருடன் காணப்படுகின்றனர்.
(படம்: கோப்பாய் நிருபர்)

# அரச ஊழியர்களின் நிறுத்தப்பட்ட சொத்துக்கடன் வழங்க நடவடிக்கை

21 ஆயிரம் அரச ஊழியர்களின் சொத்துக்கடன் விண்ணப்பங்கள் வங்கிகளில் கிடப்பில் போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிட்டத்தட்ட 38 ஆயிரம் பேர் வரை காணிக் கொள்வனவு செய்யும் பொருட்டோ அல்லது வீடுகட்டும் பொருட்டோ ஏழுவருட சம்பள முற்பணக்கடனுக்கு விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 17 ஆயிரம் அரச அலுவலர்களுக்கு மட்டுமே வங்கிகளால் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கென வங்கிக்குரிய வட்டி 11 சதவீதத்தில் 4 சதவீதம் அரச ஊழியர்களினாலும் 7சதவீதம் அரசாங்கத்தினாலும் செலுத்தப்படுகிறது.

வங்கிகள், அரசாங்கத்திடம் இக் கடனுக்கான வட்டி வீதத்தினைக் கூட்டுமாறு விண்ணப்பித்துள்ளன. இதற்கான முடிவு கிடைக்கும்வரை கடன் வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச வருமான வரித்துறை மற்றும் நிதி அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாப்பிட்டிய இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், இக்கடனுக்கு அரசால் வழங்கப்படும் வட்டி வீதத்தினை 8.5வீதமாக உயர்த்துவது பற்றி அமைச்சரவைப் பத்திரம் விரைவில் வெளியிடப்படும் என்று தெரிவித்துள்ளார். (அ)

## அடையாள அட்டை

எமலியூஸ் ஜெனிதா, புனித ஜேம்ஸ் மேற்குவீதி, குருநகர், யாழ்ப்பாணம் என்பவரது 7772 93125V இலக்க தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். (கு)

## திருஞானசம்பந்தர் குருபூசை

அகில இலங்கை திருமுறை மன்றம் வருடந்தோறும் நடாத்திவரும் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் குருபூசையும் அவர் அருளிய அற்புதத் திருப்பதிகங்கள் முற்றோதலும் இன்று காலை 7.00 மணிக்கு யாழ்ப்பாணம, நாவலர் வீதி கடையிற் சுவாமி அன்னசத்திர சிவன் கோவிலிலும், காலை 10.00 மணிக்கு ஸ்ரீசட்டநாதர் சுவாமி தேவஸ்தானத்திலும் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ)

# இராசிபலன்

02.06.2007
வைகாசி 19. சனிக்கிழமை
பிரதமை மு.ப. 07.58 மணிவரை
கேட்டை மு.ப. 09.31 மணிவரை
இராகுகாலம் 08.52-10.22 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
திருஞானசம்பந்தர் குருபூசை
திருநீலகண்ட யாழ்ப்பாணர் குருபூசை

**மேடம்:-** இடமாற்றம், நிர்ப்பந்த நிலை, சரீரப்பிரயாசை, எதிர்பாராத செலவு.

**இடபம்:-** அஜீரணக் கோளாறு, மனக்கவலை, பொருள் விரயம், காரிய தாமதம்.

**மிதுனம்:-** கீர்த்தி, தேகநலன், களஸ்திர நன்மை, காரிய சித்தி.

**கடகம்:-** தடைப்பட்ட காரியம் கைகூடும், சுவாரஸ்யம், ஆரோக்கியம், சத்துருஜெயம்.

**சிங்கம்:-** தாழ்ந்த சுபாவம், பணக்குறைவு, காரிய தாமதம், உடல்நலக்குறைவு.

**கன்னி:-** தன்னம்பிக்கைக்குறைவு, தனவிரயம், பித்தரோகம், தாய்வழி உறவு.

**துலாம்:-** மனோதைரியம், இனிய சம்பவம், தொழில் விருத்தி, போசனசுகம்.

**விருச்சிகம்:-** கௌரவக்குறைவு, அதிக செலவு, விவாதம், முயற்சி தாமதம்.

**தனுசு:-** தெய்வசிந்தை, வெகுமானம், சயனசுகம், நல்ல முயற்சி.

**மகரம்:-** சோம்பல் நிலை, தனவிரயம், வீண் அலைச்சல், சயனசுகக் குறைவு.

**கும்பம்:-** செய்தொழில் விருத்தி, பெரியோர் ஆதரவு, பொருள் சேர்க்கை, முயற்சிபலிதம்.

**மீனம்:-** பிரபுத்தனம், பிறருக்கு உதவுதல், காரிய சித்தி, மனமகிழ்ச்சி.

-வளவன்

ஒவ்வொருவனும் தன்னை அறிஞன் என்று நினைக்கின்றான். அதனால்தான் உலகில் இத்தனை முட்டாள்கள் இருக்கின்றார்கள்.

—அரிகேரி

வலம்புரி

# நாராயணாய; ஹரி ஓம் எம்.கே. நாராயணாய

இந்து சமயத்தில் காத்தல் கடவுள் நாராயணன். இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன்.

அந்த நாராயணன் உலகைக் காக்க, எம்.கே. நாராயணன் இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பணியைச் செய்கின்றார்.

விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதலை முறியடிப்பதற்கான ஆயுதங்களைத் தந்துதவுமாறு, இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தியாவிடம் கேட்டிருந்தார்.

விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதலை முறியடிப்பதற்காக ஆயுதங்களை இந்தியா தர மறுத்தால், ஏனைய நாடுகளிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்வோம் என்ற வெருட்டும் இலங்கையினால் விடுக்கப்பட்டது.

எது கதைத்தாலும் இந்தியா மௌனம் சாதிக்கும் என நினைத்த இலங்கைக்கு இந்தியாவின் பதில் பலத்த அடியாக அமைந்துவிட்டது.

அதாவது விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதல் மற்றும் தரைவழித் தாக்குதல்களுக்கான ஆயுதங்களும் ராடர் கருவிகளையும் கோத்தபாய ராஜபக்ஷ இந்தியாவிடம் கேட்டிருந்தார்.

அவற்றை வழங்குவதற்கு இந்தியா மறுத்தால் கூட அதைப் பற்றிப் பரவாயில்லை. நாம் வேறு நாடுகளிடம் அந்த ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வோம் என்ற தொனிப்பும், அவ்வாறு வேறு நாடுகளிடமிருந்து ஆயுதங்களைப் பெற்றால் அது விடயத்தில், இந்தியா வாய்திறக்கக் கூடாது என்ற பாங்கும் கோத்தபாய ராஜபக்ஷவின் கோரிக்கையில் தொனித்தது.

இதற்குப் பதிலளித்த இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், இலங்கைக்கு விமான எதிர்ப்பு ஆயுதங்களைத் தர முடியாது.

அதேநேரம் இந்தியாவை மீறி பாகிஸ்தானிடமோ, சீனாவிடமோ எந்த ஆயுதமும் கொள்வனவு செய்யவும் கூடாது என உறுதிப்படத் தெரிவித்துவிட்டார்.

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த கதையாக இலங்கையின் நிலைமை மாறிவிட்டது. அதாவது இந்தியாவை வெருட்டி ஆயுதத்தைப் பெற்று விடலாம் என்ற எண்ணம் தோல்வியில் முடிந்து போனது.

அதுமட்டுமன்றி, ஆசியாக் கண்டத்தில் இந்தியா மிகப் பெரும் சக்தி வாய்ந்த நாடு. எம்மை மீறி பாகிஸ்தானிடமோ, சீனாவிடமோ ஆயுதம் எதனையும் கொள்வனவு செய்யக் கூடாது என கோத்தபாய ராஜபக்ஷவிடம் இந்தியா கூறிவிட்டது.

இந்தியாவின் இந்தக் கூற்றுக்குள் எம்மை மீறி வேறு எந்த நாட்டில் ஆயுதம் வேண்டினாலும் அதற்குப் பதிலடி தருவோம் என்ற எச்சரிக்கை உள்ளடங்கியிருப்பதை இலங்கை ஐயந்தெளிவுற உணர்ந்திருக்கும்.

இந்தியாவின் இந்த எச்சரிக்கையை இலங்கை அரசு தனது சுய கௌரவம் கருதி பாதுகாப்பாக வைத்திருக்க முற்பட்டிருந்தாலும், எம்.கே. நாராயணன் அதனைப் பகிரங்கப்படுத்தி விட்டார்.

இனி என்ன செய்வது ஹரி ஓம் நாராயணாய; எம்.கே.நாராயணாய என்று உச்சாடனம் செய்வதைத் தவிர.

# மகிந்த சிந்தனை பலவீனமடைவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது

## ஜாதிக ஹெலஉறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு மூலம் வெளியிடப்படுகின்ற இனப்பிரச்சினை தீர்வுக்கான இறுதி யோசனையில் சிங்கள மக்களே இந்நாட்டின் தேசிய இனத்தவர் என்ற கோட்பாடு உட்படுத்தப்பட வேண்டும். இல்லாவிடின் ஜாதிக ஹெலஉறுமய கடுமையான தீர்மானங்களை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படும் என்று ஹெலஉறுமயவின் கொள்கை வகுப்பாளரும் சுற்றாடல்துறை அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் மூலம் வெளிவரும் யோசனை எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ்விடயம்தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது;

ஜாதிக ஹெலஉறுமய இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனையை முன்வைத்துள்ளது. எமது கட்சியின் யோசனையை நாங்கள் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்குஞ்சமர்ப்பித்து விட்டோம்.

சிங்களவர்கள் மட்டுமே இந்நாட்டின் தேசிய இனத்தவர்கள் என்ற கோட்பாட்டின்அடிப்படையில் எமது யோசனை தயாரிக்கப்பட்டுள்ளது. சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள எமது யோசனையில் சில திருத்தங்கள் கொண்டு வரப்படலாம்.

ஆனால் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் மூலம் வெளியிடப்படுகின்ற இறுதித் தீர்வு யோசனையில் சிங்களவர்களே நாட்டின் தேசிய இனம் என்ற கோட்பாடு இடம்பெற வேண்டும். இது மிகவும் முக்கியமான விடயமாகும். இது குறித்து நாங்கள் மிகவும் அவதானமாக இருப்போம்.

இறுதித் தீர்வு யோசனையில் சிங்களவர்கள் நாட்டின் தேசிய இனம்என்ற விடயம் இடம்பெறாது விடின் நாங்கள் மிகவும் கடுமையான தீர்மானத்தை எடுப்போம்.

மகிந்த சிந்தனையைப் பலப்படுத்துவதற்காகவே எமது கட்சி அரசாங்கத்துடன் இணைந்து கொண்டது. அந்த வகையில் மகிந்த சிந்தனை பலவீனமடைவதற்கு இடமளிக்க மாட்டோம். அதனால்தான் அரசாங்கத்திற்குள் இருந்து கொண்டு மகிந்த சிந்தனையைப் பாதுகாத்து வருகின்றோம்.

அமைச்சர் திஸ்ஸ விதாரண சில மாதங்களுக்கு முன்னர் தனிப்பட்ட ரீதியில் யோசனை ஒன்றை முன்வைத்தார். அந்த யோசனை வெளிநாட்டுத் தூதுவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டதாகவே நாங்கள் உணருகின்றோம்.

அவ்வாறான செயற்பாடுகளை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. அமைச்சர் திஸ்ஸ விதாரணவுக்குத் தீர்வு யோசனை ஒன்றை முன்வைக்கும்அதிகாரம் இல்லை. அவர் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் என்ற ரீதியில்அதற்கான கடமையை மட்டுமே செய்ய வேண்டும் என்றார். (ச–5)

# புதிதாக பாடசாலை கூட்டுறவு சங்கங்களை அமைக்குமாறு கல்வி அமைச்சு கோரிக்கை

(கொழும்பு)

அரச பாடசாலைகளில் தற்போது செயலிழந்து போயுள்ள பாடசாலைக் கூட்டுறவுச் சங்கச் செயற்பாடுகளை புனர்நிர்மாணம் செய்து கூட்டுறவு முகாமையை மாணவர்களிடையே விருத்தி செய்து புதிதாகப் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்குமாறு கல்வி அமைச்சு சகல பாடசாலை அதிபர்களையும் கோரியுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் ஆரியரத்ன ஹேவகே இது தொடர்பான சுற்று நிருபத்தை சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்கவுள்ள மாணவர்களிடையே விழுமியங்களை மேம்படுத்தி சுயமாக மற்றும் சகவாழ்வுடன் வாழக் கூடிய சமூகத்தை கட்டி எழுப்புவதற்காக கூட்டுறவு முறை பாடசாலை மாணவப் பருவத்தில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

பாடசாலை கூட்டுறவுச் சங்கங்களினால் பாடசாலைச் சமூகத்திற்குப் பொருளாதார சமூக மற்றும் கலாசார நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் ஒழுக்க விழுமியம் கொண்ட சமூகத்தைக் கட்டி எழுப்ப ஒத்துழைப்பை வழங்கக் கூடிவாறு அறிவு, திறமை, சிந்தனை கொண்ட மாணவர்களை உருவாக்கல் என்பன பாடசாலைக் கூட்டுறவுச்சங்கங்களின் நோக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந் நோக்கத்தை அடையக் கூடியதாக மாணவர்களை பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவர்களாக இணைத்துக் கொண்டு மாணவர்களிடையே சிக்கனக்கணக்கு, தொழில் திறமை, நிபுணத்துவ அறிவு தொடர்பான வேலைத் திட்டங்களையும் தலைமைத்துவ அறிவு, கூட்டுறவு, ஜனநாயக பண்பு தொடர்பான வேலைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துமாறு கல்வி அமைச்சின் செயலாளர் அதிபர்களைக் கேட்டுள்ளார். (ச)

# பொலிஸாரின் அறிவிப்புக்கு தமிழ்க் கூட்டமைப்புக் கண்டனம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள விடுதிகளில் தங்கியிலுள்ள தமிழ் மக்களை 24 மணி நேரத்திற்குள் வெளியேற்றிவிட வேண்டும் என பொலிஸார் விடுதி உரிமையாளர்களுக்குக் கட்டளையிட்டதையடுத்து விடுதி உரிமையாளர்கள் தமது விடுதிகளில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு மேற்படி தகவலைத் தெரியப்படுத்தியதை அடுத்து இச் செய்தி காட்டுத்தீ போல பரவி கொழும்பு, யாழ்ப்பாணம், வன்னி, கிழக்கு மாகாணம், மலையகம் மற்றும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களின் மத்தியில் பெரும் அச்சத்தினையும் பதற்றத்தினையும் ஏற்படுத்தியுள்ளது என தமிழ்க் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கூட்டமைப்பின் யாழ்.பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

பொலிஸாரின் பொறுப்பற்ற உத்தரவினால் தமிழ் மக்கள் உளவியல் ரீதியாக பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பில் இன்று பெருமளவில் தங்கியிருப்பவர்கள் சிங்கள பௌத்த பேரினவாத அரசினால் வடக்குக் கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அரச பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக அகதிகளாக்கப்பட்டவர்கள்.

படுகொலை முயற்சியிலிருந்து தப்பியவர்கள் அல்லது அவர்களின் கொலைப் பட்டயலில் பெயர் இடம்பெற்று உள்ளோர் மற்றும் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டபின் உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டமையினால் தமது தாயகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களும் வாழ வழி தெரியாத நிலையில் உறவினர்களின் உதவியுடன் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்று விட வேண்டும் என்பதற்காக வந்து கொழும்பில் தங்கியிருப்பவர்களாவர்.

இவர்களில் மிகப் பெரும்பான்மையானோர் தாமாக விரும்பி கொழும்புக்கு வந்தவர்கள் அல்ல. யாழ்.குடாநாட்டில் ஆட்கடத்தல்கள், கொலைகள், கொள்ளைகள், சித்திரவதைகள் வகைதொகையின்றி பகிரங்கமாக நடைபெற்று வரும் நிலையில் அச்சமடையும் இளைஞர்களும் யுவதிகளும் குடும்பத் தலைவர்களும் தமது உயிரைக் காப்பாற்ற நாட்டை விட்டு வெளியேறி விட வேண்டும் என்பதற்காகத் தமது வாழ்விடங்களில் இருந்து தப்பி கொழும்புக்கு வந்துள்ளனர்.

அத்துடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வேண்டிய நோயாளர்களும் அரசாங்க அலுவல்களுக்காக வந்தவர்களும் வேறு சில தனிப்பட்ட தேவைகளுக்காக வந்தவர்களும் பொலிஸாரின் மேற்படி அறிவிப்பினால் பதற்றமடைந்து எங்கு செல்வது எப்படிச் செல்வது என்று தெரியாது தவித்துப் போயுள்ளனர்.

தமது தாயகப் பிரதேசத்தில் நிம்மதியாக வாழ்ந்தவர்களைஅங்கு நிம்மதியாக வாழ விடாது விரட்டியடித்தது போதாது என்று தற்போது கொழும்பில் உள்ள விடுதிகளில் தங்கியிருப்பவர்களையும் வெளியேற வேண்டும் என்று உத்தரவிடுவதன் மூலம் தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும் என அரசு எதிர்பார்க்கின்றது.

குடும்பத்துடன் தற்கொலை செய்து சாக வேண்டும் என எதிர்பார்க்கின்றதா? அல்லது வடக்குக் கிழக்கிற்குச்சென்று ஆயுதம் ஏந்திப் போராடி தமிழர்களுக்கென தனியான தேசத்தினை உருவாக்கி அங்கு வாழ வேண்டும் என எதிர்பார்க்கின்றதா?

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் கொழும்பைப் பாதுகாத்து விடலாம் என்று அரசு கருதினால் அது வடிகட்டிய முட்டாள்தனமாகவே அமையும். வட–கிழக்கு தமிழ்மக்கள் கொழும்பில் தங்கியிருப்பது இலங்கையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்று அரசு கருதுவது போன்று தமிழர் தாயகப் பிரதேசத்தில் அரச பயங்கரவாதப் படைகள் தங்கியிருப்பது தமது உயிர் உடைமைகளுக்கும் தமது தாயகத்திற்கும் அச்சுறுத்தல் என தமிழ் மக்கள் கருதுகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# உலக விஞ்ஞானிகள் கலந்து கொள்ளும் சர்வதேச மாநாடு கொழும்பில்

இலங்கையின் இரசாயன அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட செம்ரெக்–2007 என்ற சர்வதேச மாநாடு எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 23 ஆம்திகதி வரை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் சர்வதேச ரீதியாக நிபுணத்துவம் வாய்ந்த பல விஞ்ஞானிகள் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவுஸ்திரேலியா, இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான், கென்ஜா, அயர்லாந்து, பிரித்தானியா, உக்ரேன், பிரான்ஸ் மற்றும் இலங்கையிலுள்ள விஞ்ஞானிகள் இவ் அமைப்பின் வேண்டுகோளுக்கு அமைய இம் மாநாட்டில் உரையாற்ற உள்ளனர்.

1941 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் இரசாயன அமைப்பில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இரசாயனவியலாளர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இராஜகிரியவில் அமைந்துள்ள இவ் அமைப்பு தொழில் சார்ந்த கல்வி வழங்குவதற்கான வசதியை உள்ளடக்கியதுடன் இதுவரை 500க்கும் அதிகமான பட்டதாரிகள் இரசாயனத்துறையில் பட்டம் பெற்றுள்ளனர் என இவ் அமைப்பின் பதிவாளர் என்.எஸ். நடராஜா தெரிவித்துள்ளார். (ச–3)

# சிறிலங்கா எயார் லைன்ஸின் உள்ளூர் சேவைகள் ரத்து!

(கொழும்பு)

சிறிலங்கன் எயார் லைன்ஸ் தமது உள்ளூர் சேவைகள் அனைத்தையும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் ரத்துச் செய்யவுள்ளதாக நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி நேற்றுத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகையின் வீழ்ச்சிகாரணமாகவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இவ் வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையுடன் சென்ற வருட அதே காலப் பகுதியுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் 20 வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல் சம்பவங்களை அடுத்து இரவு நேர சர்வதேச விமான சேவைகள் அனைத்தும் ரத்துச்செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

# கடந்த இரு நாட்களில் 23 பேர் அகதிகளாக இந்தியா பயணம்

(சென்னை)

கடந்த இரு நாட்களில் வான் மற்றும் கடல் மார்க்கமாக 23 பேர் இந்தியாவிற்கு அகதிகளாக சென்றுள்ளனர். வவுனியா மற்றும் யாழ்ப்பாணப் பிரதேசங்களைச் சேர்ந்த நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 9 பேர் அகதிகளாக இந்தியாவிற்கு சென்றுள்ளனர்.

விமானம் மூலம் சென்ற இவர்கள் அகதிகளுக்கான மறுவாழ்வு ஆணையாளரிடம் அனுமதி பெற்றுள்ளனர். இவர்கள் மண்டபம் பொலிஸாரால் விசாரணை மேற்கொள்ளப்பட்ட பின் அகதி முகாமிற்கு அனுப்பிவைத்ததாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இராமேஸ்வரம் பகுதிக்கு கடந்த 30 ஆம் திகதி மேலும் பல இலங்கை அகதிகள் சென்றுள்ளனர். திருகோணமலை, வவுனியாவைச் சேர்ந்த எட்டு ஆண்கள், 2 பெண்கள், ஒரு குழந்தை உட்பட ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 11 அகதிகள் கடந்த 30 ஆம் திகதி அங்கு சென்றுள்ளனர்.

மன்னார் கடற்கரையில் இருந்து புறப்பட்ட அவர்கள் அன்று நள்ளிரவு தனுஷ்கோடி அரிச்சல் முனைக் கடற்கரையை சென்றடைந்துள்ளனர். (ச-3)

# வெடி பொருட்களுடன் சென்ற லொறி பொலிஸாரிடம் சிக்கியது

பெருமளவான வெடிமருந்துகளுடன் சென்ற லொறி ஒன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். நிக்கவெருடிய கொற்றவெகர என்ற இடத்திலேயே அவ் லொறி கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சூட்சமான முறையில் அமைக்கப்பட்ட இரகசியத் தளங்களில் அவ் வெடிமருந்துகள் மறைத்துவைக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் முக்கிய பகுதியை அல்லது முக்கிய நபர் ஒருவரை தாக்குவதற்காக இவ் லொறியில் வெடிபொருட்கள் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை அப் பகுதி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-3)

# எறிகணை வீச்சில் பிரிக்கேட் தளபதி படுகாயம்

(கொழும்பு)

மணலாற்றில் படையினரின் நிலைகள் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய மோட்டார் எறிகணை வீச்சில் 22-3 ஆம் பிரிக்கேட் தளபதி படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மணலாறு அதவதுநுவெவப் பகுதியில் படை நிலைகள் மீது விடுதலைப்புலிகள் செறிவான எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்த எறிகணைகள் படை நிலைகளில் வீழ்ந்து வெடித்ததில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். சம்பவ இடத்தை பார்வையிடுவதற்காக வெலி ஓயா 22-3 ஆம் பிரிக்கேட் தளபதி கேணல் சுஜீவ எதிரிசிங்க அப் பகுதிக்கு சென்றிருந்தார்.

அந்த வேளை மீண்டும் விடுதலைப்புலிகள் நடத்திய எறிகணைத் தாக்குதலில் பிரிக்கேட் தளபதி கேணல் சுஜீவ எதிரிசிங்கவும் நான்கு இராணுவத்தினரும் படுகாயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# அமைச்சர் சந்திரசேகரன் ஜனாதிபதிக்குக் கடிதம்

(கொழும்பு)

பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவோரை கண்டு பிடிக்கும் செயற்பாட்டில் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவது ஒரு வகையில் பயங்கரவாதமே ஆகும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

புறக்கோட்டையில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ள தமிழ் மக்களை வெளியேற்றுமாறு பொலிஸார் உத்தரவிட்டமையை கண்டித்து ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே சந்திரசேகரன் எம்.பி. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; புறக்கோட்டைப் பகுதியில் உள்ள விடுதிகளில் தங்கியிருக்கும் தமிழர்களை வெளியேறுமாறும் உடனடியாக இதனைச் செய்யவேண்டுமென்றும் பொலிஸார் அவர்களை பலவந்தமாக வெளியேற்ற நேரிடும் எனவும் பாதுகாப்புத் தரப்பினரிடம் இருந்து விடுதி நடாத்துநர்கள் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக எனக்குத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அப் பகுதி காவல் துறை அதிகாரியுடன் நான் தொடர்பு கொண்டு கேட்டபோது இந்தத் தகவல் தவறு என்று அவர் தெரிவித்தாலும் புறக்கோட்டைப் பகுதி தமிழர்களிடையே எழுந்துள்ள பதற்ற நிலைமைகள் எனக்கு வரும் தொடர்ச்சியான தொலைபேசி அழைப்புகள் மூலம் தெரிய வருகின்றது. எனவே படைத்தரப்பினால் பிறப்பிக்கப்பட்ட இவ் உத்தரவை மீளப்பெற சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பணிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## போர் நிறுத்த உடன்படிக்கையை...

படிக்கை நாட்டுக்குத் தேவை யில்லை என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவருமான விமல்வீரவன்ச தெரிவித்தார்.

போர் நிறுத்த உடன்படிக்கையின் எதிர்காலம் குறித்து அரசாங்கம் இன்னும் சில வாரங்களில் முக்கிய தீர்மானம் ஒன்றை எடுக்கும் என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ் விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது, போர் நிறுத்த உடன்படிக்கையின் எதிர்காலம் குறித்து ஆராய வேண்டிய நிலைமை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. போர் நிறுத்த உடன்படிக்கை குறித்து ஆராய்வதற்கு எதுவும் இல்லை.

அதனை உடனடியாக ரத்துச்செய்து விட வேண்டும். ஆரம்பத்திலேயே போர் நிறுத்த உடன்படிக்கை ரத்துச்செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அதனை ரத்துச் செய்யாமல் இருக்கின்றது என்றார். (ச)

## மடுத்தேவாலயப் பிரதேசத்தை...

அனைத்து இலங்கை மக்களினதும் கௌரவத்திற்கு உரித்தான வன்னிமாவட்டத்தில் அமைந்துள்ள மடுமாதா தேவாலயம் அதனை அண்டிய பிரதேசத்தை யுத்தத் திற்கு அப்பாற்பட்ட சமாதான வலயமாக பிரகடனப்படுத்துவதற்கு முன்வரவேண்டும்.

மடுமாதா தேவாலயம் எப்போதும் சமய நடவடிக்கைகளுக்கு மட்டும் உரித்தான ஸ்தலம் என்பதால் யுத்த நிலைமை அதன் பாதிப்புக்கள் அதனை அண்டாது இருக்க வேண்டும். எதிர்கால சந்ததியினரை கருத்தில் கொண்டு அந்தப் புண்ணிய பூமியை பாதுகாத்துத் தருமாறு கோருகின்றேன்.

600 ஆண்டுகளுக்குமேல் பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தேவமாதா சிலையும் அந்த தேவாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது ஏற்பட்டுள்ள யுத்த மயமான சூழலால் மடுமாதா தேவாலய திருவுருவம், அந்த தேவாலயம் போன்றவை பாதுகாப்பற்ற நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளதோடு யுத்தமயமான சூழலால் இந்த தேவாலயத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

உலகமே ஏற்றுக்கொண்ட மனித சம்பிரதாயபூர்வமான நீதிமுறைமைகளின் கீழ் யுத்த மயமான சூழலில் அமைந்துள்ள வணக்கத்திற்குரிய ஸ்தலங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு இது தொடர்பாக அரச பாதுகாப்புப் பிரிவினரும் புலிகளும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். (ச)

## நேர்மையாக பிரச்சினையைத்...

பாலானவர்கள் இந்தியாவில் இருந்துதான் இலங்கைக்கு வந்தார்கள்.

இந்தியாதான் அவர்களுடைய தாய் நாடு. இதனை எவரும் மறுக்கமுடியாது. இந்தியாவிற்கும் இலங்கைக்குமான தொடர்பினை அதிகரிக்க வேண்டிய தேவையும் இந்தியாவினை மதித்து நடக்கவேண்டிய தேவையும் இலங்கைக்கு உண்டு.

இவற்றினை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இலங்கை அரசு இதனைப் புரிந்து கொள்ள ஆரம்பித்திருந்தால் அது நல்ல சகுனமென நினைப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

இலங்கை ஆயுதம் வாங்கவேண்டிய அவசியம் இல்லையென தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் நாட்டின் தேசிய பிரச்சினையை நிதானமாகவும் நேர்மையாகவும் தீர்த்தால் ஆயுதம் வாங்க வேண்டிய வந்திருக்காது.

எம்மைப் பொறுத்தவரையும் தமிழர்களை அழிப்பதற்கு ஆயுதங்கள் வாங்குவதனை நாங்கள் ஆதரிக்கவில்லையென அவர் கூறினார். (ச-3)

## கருணா...

தாக்குதலில் மேலும் மூவர் காயமடைந்திருப்பதாக கூறப்படுகின் றது. இவர்கள் ஆட்டோவில் சென்று கொண் டிருந்த போது இனந்தெரியாத ஆயுததாரி கள் தாக்குதல் நடாத்தியதாக கூறப்படுகின்றது. (ச)

## கிளிநொச்சியை...

படையினருக்கான மருத்துவத்தை வழங்கும் அணியினர், காவலரண்கள் மற்றும் காப்பரண்களை அமைக்கும் அணிகள் என பின்தள ஏற்பாடுகளுக்கான அணிகளும் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே இவ்வாறான பாரிய நடவடிக்கையை படையினர் மேற்கொள்ளத்தயாராக இருந்தவேளை கூட்டுப்படைத் தளம் மீது விடுதலைப்புலிகள் வான் தாக்குதலை நடத்தியதால் படை நடவடிக்கை பிற்போடப்பட்டிருந்தது.

யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தீவகம் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. படை நடவடிக்கையில் ஈடுபடும் வேளை விடுதலைப்புலிகள் தீவகப்பகுதிகள் மீது தாக்குதலை நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக பண்ணை வீதி, புங்குடுதீவு, குறிகாட்டுவான் வீதி, மண்டைதீவு ,வேலணை போன்ற தீவகப் பகுதிகள் மற்றும் தீவகத்திற்குச் செல்லும் பாதைகள் அனைத்துப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளன என தமிழ்நெற்றின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பொதுமக்கள் மீது அரசாங்கம்...

பக்ஷ அரசாங்கத்தையே சாரும்.

அரசாங்கம் தனது பொருளாதார சுமையை மாற்று வழிகளில் நிவர்த்திக்க வேண்டும். மாறாக எரிபொருட்களில் தங்கியிருக்கக் கூடாது. அரசாங்கம் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டுள்ளது.

அத்துடன் ஊழல் மோசடிகள் அதிகரித்து விட்டன. இதற்குப் பின்னரும் மக்கள் பொறுமையாக இருக்கமாட்டார்கள். புலிகள் மீது பதில் தாக்குதல் மேற்கொள்கின்ற அதே வேளை மக்கள் மீது பொருளாதார தாக்குதல்களை மேற்கொள்கின்றது.

அரசாங்கம் ஊழல் நிறைந்த நிர்வாகத்தை நடாத்துகின்றது. மக்கள் மீது மேற்கொள்கின்ற பொருளாதாரத் தாக்குதல்களை எதிர்க்க மக்கள் அணிதிரளவேண்டும். எரிபொருட்களின் மூலம் அரசாங்கம் பெற்றுக்கொள்கின்ற வரியை குறைக்க வேண்டும்.

எனவே வாழ்க் கைச் செலவு உயர்வதை குறைக்க போராட் டம் நடாத்துவதற்காக மக்கள் ஜே.வி.பியுடன் இணைய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நீண்டகாலமாக...

போக்குவரத்து வசதிகளை வழங்க அரசாங்கம் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது அடையாளங்களை உரிய முறை யில் உறுதிப்படுத்த முடியாத ஆவணங்களு டன் விடுதிகளுக்கு வருபவர்களை அனுமதிக்க வேண்டாமென விடுதி உரிமையாளர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித் துள்ளார். (ச-3)

## புரிந்துணர்வு...

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதா? இல்லையா? என்பது குறித்த முடிவை அரசு இரு வாரங்களுக்குள் அறிவிப்பதாக தெரிவித்துள்ளமை குறித்து கேட்டபோது கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தொபினூர் ஓமர்சன் இதனைத் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மாற்றம் எதனையாவது கொண்டுவருவதா? அல்லது இவ் ஒப்பந்தத்தை ரத்துச்செய்வதா? என்பது குறித்து அரசாங்கம் தமக்கு எவ்வித அறிவுறுத்தல்களையும் இதுவரை விடுக்கவில்லையென தொர்பினூர் ஓமர்சன் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தத்தின் சரத்துக்களுக்கு அமைய போர் நிறுத்த ஒப்பந்தம் தம்மால் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக தெரிவித்த அவர் ஊடகங்களில் பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் வெளியாகிவருவதற்கு தாம் பொறுப்பல்ல எனவும் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார். (ச-3)

தரம்:4 மாணவர்களுக்கான
திரு. கணேசலிங்கம் (பிரதம பரீட்சகர்) அவர்களின்
வெற்றித் தேர்வு-1
விடையுடன், இலவச கையேட்டுடன்
வெளிவந்து விட்டது
தரம்:5 மாணவர்களுக்கான
வெற்றித்தேர்வு-14
விடையுடன், இலவச கையேட்டுடன்
இப்பொழுது சகல புத்தகசாலைகளிலும்.
மேலதிக விபரங்களுக்கு 0773126807 / 021 222 9016
வடமராட்சி-021 226 3815
(099)

தேவை
எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்.
❖ விற்பனைப் பிரதிநிதிகள்
(18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்)
❖ கணக்காளர்
(45 வயதுக்கு மேல்)
தகுதியானவர்கள் நேரில் வரவும்.
தொலைபேசி:- 222 7543
புதிய கஸ்தூரி, யாழ்வீதி, மானிப்பாய்.
(C-126)

விற்பனைக்கு
நெல்லியடியில் இயங்கி வரும் தனியார் வாணிபம் (அழகு சாதனம், அலங்கார, வீட்டு உபகரணப் பொருட்கள்) முற்று முழுதாக விற்றுத்தீர்த்தல். மொத்தமாக பெற்றுக் கொள்பவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும். அத்துடன் கடைக்குரிய அலுமினிய சோட்கேஸ்களும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு; 0777149459
(C-127)

இப் பத்திரிகை வலம்புரி அசோ.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.